

ஈரோடு நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் கொடுமுடி ஒன்றியத்தில் அஞ்சு ஊர் ஊராட்சியில் 30 ஆயிரம் லிட்டர் டேங்க் தண்ணீர் தொட்டியினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக கே.இ.பிரகாஷ் எம்.பி. நேற்று திறந்து வைத்தார்.



குன்றத்தூர் ஒன்றிய பா.ஜ.க ஒன்றிய செயலாளர் ராஜவேல் தலைமையில் சுற்றுச்சூழல் பிரிவு கமல், அரசு தொடர் பிரிவு பிரதீப் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட பா.ஜ.க.வினர் அக்கட்சியில் இருந்து விலகி மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தே மாதரம், மாநில இளைஞர் துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், ஊராட்சி மன்றத் தலைவர் பா.சுதாகர், கிளைச் செயலாளர் கண்ணதாசன், இளைஞர் அணி மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

### ஆகஸ்டு 7 - முத்தமிழறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு நாள்!

# உதகையில் - கலைஞர் திருவுருவச் சிலைக்கு மலரஞ்சலி!

## நீலகிரி மாவட்டக் கழகத்தினருக்கு - மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் வேண்டுகோள்!

நீலகிரி, ஆக.5

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6-ஆம் ஆண்டு நினைவுநாளையொட்டி உதகையில் கலைஞர் திருவுருவச் சிலைக்கு மலரஞ்சலி செலுத்த வருமாறு மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

திராவிட இயக்கத்தின் மூத்த தலைவராக திகழ்ந்து, இந்திய அளவில் அனைத்து மாநிலங்களிலும், முதன்மை மாநிலமாக தமிழகத்தை திகழவைக்கும் முதல்வர் தளபதி அவர்களை நமக்கு தந்தவர்.

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதல்வராக இருந்ததோடு, தொடர்ந்து இந்திய அரசியல் வரலாற்றில் சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்ட அனைத்து தேர்தல்களிலும் வெற்றி கண்டு ஒவ்வொரு கழக தொண்டனுக்கும் பெருமை சேர்த்து, தமிழ்நாடு அனைத்து துறைகளிலும் இன்றும் சிறப்பு பெற்றிட அடித்தளமாக திகழ்ந்தவர்.

திராவிட முன்னேற்ற கழகம் எனும் பேரியக்கத்தை கண்ட பேரறிஞர் அண்ணா வழியில் அயராது உழைத்து கழகத்தையும், கழக கொள்கைகளையும் தன் கண் இமை மூடும் கடைசி நொடி வரையிலும் பாதுகாத்து, தமிழ் மொழிக்காக, தமிழினத்திற்காக உழைத்த நம் நெஞ்சத்தை விட்டு அகலாத தலைவர் கலைஞர் அய்யா அவர்களின் 6வது நினைவு நாளில் புகழஞ்சலியை செலுத்திடுவோம்.

கழக தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி, கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கும், நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் கலைஞர் அய்யா



அவர்களின் திருவுருவ படங்களை அலங்கரித்து வைத்தும் மலர் அஞ்சலி செலுத்திட அன்புடன் வேண்டுகிறேன்.

அதன்படி, ஆகஸ்டு 7-ஆம் தேதி புதன்கிழமை காலை 11.30 மணியளவில், மாவட்ட கழக அலுவலக முகப்பில் உள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இதனை தொடர்ந்து மாவட்டத்திலுள்ள அனைத்து நகர - ஒன்றிய - பேரூர் - கிளை கழகங்களிலும் கலைஞர் அவர்களின் திருவுருவப் படங்களை அலங்கரித்து வைத்து நம் இதய தலைவர் அவர்களுக்கு நம் மரியாதையை செலுத்திட வேண்டுவதோடு, அனைத்து பகுதிகளிலும் ஆதரவற்ற முதியோர் இல்லங்களுக்கு உணவு, பழங்கள், கம்பளி போர்வைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடத்தியும், தலைவர் கலைஞரின் நினைவுநாள் நிகழ்ச்சிகள் மாவட்டத்தில் சிறப்புற நடைபெற தேவையான ஏற்பாடுகளை தொடர்புடைய நகர - ஒன்றிய - பேரூர் - கிளை கழக செயலாளர்கள் சிறப்புடன் செய்து உதவிட அன்புடன் வேண்டுகிறேன்.

இவ்வாறு பா.மு.முபாரக் தெரிவித்துள்ளார்.

### சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க சார்பில்

# தமிழினத் தலைவர் கலைஞர் நினைவு நாள் அமைதிப் பேரணி!

## மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிக்கை!

சேலம், ஆக. 5 -

சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு

எதிர்வரும் ஆகஸ்ட் 7ஆம் தேதி புதன்கிழமை அன்று முத்தமிழறிஞர் கலைஞரின் 6ஆம் ஆண்டு நினைவு நாள். திராவிட இயக்கத்தின் பாதுகாவலராக, தமிழினத்தில் அழியா சொத்தாக, ஐந்து முறை தமிழகத்தின் முதலமைச்சராக, உலகமே போற்றும் பன்முகத் தலைவர் செம்மொழி நாயகராக நம் நெஞ்சமெல்லாம் நிறைந்து நிற்கும் நம் குடும்பத்தலைவரின் நினைவுநாள்.

தமிழே மூச்சாக தமிழர் நலமே வாழ்வாகக் கொண்டு இன உணர்வு, மொழி உணர்வு, சமூக நீதி, தீண்



டாமை ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, பெண்கள் முன்னேற்றம், சாதி ஒழிப்பு என வராற்றில், பொது வாழ்வில் உலக அளவில் அனைவருக்கும் முன் உதாரணமாகத் திகழ்ந்த நம் குடும்பத் தலைவருக்கு நினைவு நாள். மாபெரும் தலைவருடைய நினைவு நாளை முன்னிட்டு கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி வருகிற ஆகஸ்ட். 7ஆம் தேதி சேலம் மேற்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழகங்கள் தோறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலையிட்டு மலர்தூவி புகழ் அஞ்சலி செலுத்தி, ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். 07.08.2024 புதன்கிழமை அன்று காலை 08.30 மணியளவில் தாரமங்கலம் நகர தி.மு.க. அலுவலகத்திலிருந்து அமைதி பேரணியாக சென்று முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவச் சிலைக்கு சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்நிகழ்ச்சியில் சேலம் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் என அனைவரும் பெருந்திரளாக பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதிப் பேரணி!

## மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ. மகேஷ் அறிக்கை!

குமரி, ஆக. 5-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவராக, எழுத்தாளராக, கவிஞராக, இலக்கியவாதியாக, தலைசிறந்து விளங்கிய தமிழ்நாட்டின் ஐந்து முறை முதலமைச்சராகவும் இருந்த கழக தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட



தி.மு.க. சார்பில் அமைதி பேரணியானது கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் தலைமையில் 07.08.2024 புதன்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு நாகர்கோவில், வடசேரி அறிஞர் அண்ணா சிலை அருகில் இருந்து அமைதி பேரணி தொடங்கி அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்கம், மணி மேடை சந்திப்பு, எஸ்.பி. அலுவலகம், கட்டபொம்மன் சந்திப்பு, அவ்வை சண்முகம் சாலை வழியாக சென்று ஒழுகினசேரி தலைமைக் கழக அலுவலகம் வந்தடைந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு திருவுருவ வெண்கலச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளது. ஆகவே இந்த அமைதி பேரணியில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தலைவர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் முழுவதும் உள்ள மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழகங்களில் அத்தனை முக்கியமான இடங்களில் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

### நெல்லை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில்

# இராதாபுரம் தொகுதியில் கலைஞர் நூலகம்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் - இன்பா ஏ.என்.ரகு திறந்து வைத்தனர்!

நெல்லை.ஆக.5.

முதலமைச்சர் கழகத் தலைவர் அன்பு தளபதியார் அவர்கள் வழிகாட்டுதலின்படி கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி நெல்லை கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் சட்டமன்றத்திற்கு ஒரு நூலகம் என்ற வகையில் இராதாபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகே புதிதாக இளைஞர் அணி சார்பில் கலைஞர் நூலகத்தை நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மாநில இளைஞரணி துணை செயலாளர் இன்பா ஏ.என்.ரகு ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இந்நிகழ்வு தலைமை செயற்குழு உறுப்பினர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம், மாவட்ட அவைத்தலைவர் ம.கிரகாம்பெல் தலைமை செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாவட்ட இளை ஞரணி அமைப்பாளர் ஜெ. ஜான்ரபீந்தர்,

துணை அமைப்பாளர்கள் வேல்முருகன், மனோஜ் குமார், தில்லை ராஜா, அருள்ராஜ் டார்வின், ஆகாஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மாநில அணி நிர்வாகிகள் ஆவின் ஆறுமுகம், கணேஷ்குமார் ஆதித்தன், நம்பி, எரிக் ஜூடு, பொதுக்குழு உறுப்பினர்கள் எட்வின் வளன் அரசு, ஒன்றிய செயலாளர்கள் ஜோசப் பெல்சி, வி. எஸ்.ஆர்.ஜெகதீஸ், ஆர். எஸ்.சுடலை கண்ணு, திசையன்விளை பேரூர் கழக செயலாளர் ஜான் கென்னடி,

மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் எஸ்.என்.முருகன், கேசவன், சகாயபிரபு, ஏ.ஆர். ரஹ்மான், என்.முருகன், அண்டனி அல்வின் பிரேமா, பிரேம் ஆனந்த், துணை அமைப்பாளர்கள் பன்னீர்செல்வம், சதீஷ், அந்தோணி செல்வம், சக்தி குமார், ஞானராஜ், மகூதி நஸ்ருதீன், கோபி சிவா, சேவியர் ஜார்ஜ்,

மாவட்ட பிரதிநிதிகள் சரவண மணிமாறன், செல்வகுமார், சௌந்தர்

மாவட்ட கவுன்சிலர் ஜோன்ஸ் ரூபா, ஒன்றிய கவுன்சிலர்கள் இசக்கி பாபு, மௌலின், நடராஜன, ஊராட்சி மன்ற தலைவர்கள் பொன்.மீனாட்சி அரவிந்தன். பொன்.இசக்கி கந்தசாமி, மணிகண்டன், பேரூராட்சி கவுன்சிலர்கள் நடேஷ் அரவிந்த், ஆறுமுகதேவி லிங்கராஜ், பிரேம்குமார், அய்யா குட்டி, இராதாபுரம் கிளை செயலாளர் கோவிந்தராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

முன்னதாக இராதாபுரம் பேருந்து நிலையத்தில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பெற்றோர் கள் திருவுருவ சிலைக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதனைத் தொடர்ந்து இல்லம் தேடி உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சி நடைபெற்றது.

# தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஆக.5-

சென்னை, மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழ்நாட்டில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. அதிலும் குறிப்பாக மேற்கு தொடர்ச்சி மலையையொட்டிய பகுதிகளில் தொடர் மழை பெய்து வருகிறது.

இந்த நிலையில், தமிழகத்தின் 8 மாவட்டங்களில் இனி மழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தகவல் தெரிவித்துள்ளது.

அதன் விபரம் வருமாறு:

தமிழகத்தில் மழைக்கு வாய்ப்புள்ள மாவட்டங்கள்: ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நீலகிரி மற்றும் கோவை மாவட்ட மலை பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

கோவை மாவட்ட மலை பகுதிகள், நீலகிரி, கடலூர், புதுக்கோட்டை, தஞ்சை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் நாளை கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

06.08.2024 மற்றும் 07.08.2024 ஆகிய தேதிகளில் தமிழகத்தில் ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னையை பொறுத்தவரை அடுத்த 48 மணி நேரத்திற்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கிண்டி எம். கோபால்
### ஆகஸ்ட் 5 (1985)



இளம்வயதில் திராவிடக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகத்தில் உறுப்பினராக சேர்ந்து பணியாற்றியவர்.

1959ஆம் ஆண்டு கழகத்தின் சார்பில் சென்னை மாநகராட்சி தேர்தலில் கிண்டி கவுன்சிலராக போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதனால் அவரை 'கிண்டி கோபால்' என தலைவர் கலைஞர் அவர்களால் அன்பாக அழைக்கப்பட்டவர்.


சட்டப்பேரவை உறுப்பினராகவும் இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர். சென்னை பல்கலைக் கழக செனட் உறுப்பினராகவும் இருந்தவர்.

1962ஆம் ஆண்டு நடைபெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்பு அறப்போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.த.தங்கமுத்து
### ஆகஸ்ட் 5 (1998)



தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

திருச்சி மாவட்டம், மணிகண்டம் ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறை பொறுப்பு வகித்து ஒன்றியத்தில் கழகம் வளர பாடுபட்டவர்.

உய்யக்கொண்டான் திருமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

இந்திமொழி எதிர்ப்பு போராட்டம் – இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்றதோடு, நெருக்கடி நிலையின் போது, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**